1975 நவம்பர் 11]

ஆய்வுத் திட்டம் குடிநீர் வாரியத்தின் பரிசீலனைக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. மூக்கூடல் பற்றி இப்போது எந்தவிவரமும் தரப்படவில்லை.

திரு. சோ. அழகர்சாமி : அந்தப் பத்து திட்டங்கள் எவை யெவை என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சங்கரன்கோயில் அபிவிருத்தித் திட்டம் (கூடுதல் நீர்நிலைத் தொட்டி), பாளையங்கோட்டை அபிவிருத்தித் திட்டம் (கூடுதல் நீர்நிலைத்தொட்டி), சேரன்மாதேவி, பத்தமடை குடிநீர்த் திட்டம், வீரவநல்லூர் குடிநீர் திட்டம், கரண்டை குடிநீர் திட்டம், பணகுடி குடிநீர் திட்டம், செட்டிகுளம், லெவிஞ்சிபுரம் குடிநீர்த் திட்டம், செங்கோட்டை அபிவிருத்தித் திட்டம், அகில இந்திய வானொலி, ராணி அண்ணாதுரை பெண்கள் கல்லூரி, காந்திநகர் காலனி ஆகிய இடங்களுக்கு திருநெல்வேலி குடிநீர்த் திட்டம்— ஆகியவைதான் அவைகள்.

*287 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், தென்னவராயன் புதுக்கோட்டை கிராமத்திற்குப் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம்.

திரு. த. சோனையா : இந்த தென்னவராயன் புதுக்கோட்டை கிராமத்தில் குடிதண்ணீர் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அந்தத் திட்டத்தை அரசாங்கம் கொஞ்சம் துரித மாக எடுத்து முடித்துக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்தப் பகுதியில் குடி தண்ணீர் கஷ்டம் இருக்கிற காரணத்தினால்தான், குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின்கீழ் இதை மேற்கொண்டு செய்யவேண்டும் என்பது ஆலோசனையில் இருக்கிறது. அது இப்போது அநேக மாக தொடங்கக்கூடிய கட்டத்தில் இருக்கும் என்று எதிர்பார்க் கிறேன்.